| அசல் வழக்கு எண்.4/2022 | | வா. சா .1 | தேதி.05.04.2023 | |
|---|---|---|---|---|
| பெயர் | திரு.ராமசாமி | | வயது | 62 |
| த/பெ. | திரு.காரைய கவுடர் | | முகவரி | 5/26, கே. புங்கம்பாளையம், காரமடை |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை. உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

4. வழக்குச் சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள்தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் அதில் யாரும் விவசாயம் செய்துவரவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கிடையே 13/2005 என்ற ஒரு பாக வழக்கு நடந்தது என்றால் அது எனக்கு தெரியாது. வழக்குச் சொத்துக்கள் அனைத்தும் 1முதல் 3 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா உள்ளதென்றால் அது எனக்கு தெரியாது. எந்த காலத்திலும் எனது தாயாரோ நானோ எனது தாயாரின் சகோதரிகளோ பட்டாவில் பெயர் சேர்த்தச்சொல்லி மனு எதுவும் கொடுக்கவில்லையென்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கு யார் வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் நான் செலுத்தவில்லை. வழக்குச் சொத்தில் 1 முதல் 3 பிரதிவாதிகள் அவர்களுக்குரிய பாகத்தை தனித்தனியாக பிரித்து அவரவர்கள் தனித்தனியாக ஆழ்துளை கிணறு அமைத்து விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் அவர்கள் போர் போட்ட விபரத்தை என்னிடம் சொல்லவில்லை. போர் போட்டுள்ளார்கள்.

5. அவரவர்கள் போட்ட போர் வெல்க்கு தனித்தனியாக மின் இணைப்பு பெற்றுள்ளார்கள் என்றால் அவர்கள் எனக்கு தெரியாமல் வாங்கியிருப்பார்கள். என்னிடம் சொல்லவில்லை. அவர்கள் மூவரும் தனித்தனியாக பட்டா வாங்கிக்கொண்டார்கள் என்றால் அவர்கள் எப்படி வாங்க முடியும். வழக்குச் சொத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கதவு எண் எனக்கு தெரியாது. அந்த வீட்டில் 1 முதல் 3 பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் யாரும் குடியிருந்து வரவில்லை. சொத்து வரி யாருடைய பெயரில் உள்ளது என்பதை நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் அந்த வீட்டிற்கு அவர்கள் பெயரில் சொத்து வரி செலுத்தி உள்ளார்கள் என்றால் என் பாட்டிதான் சொத்து வரி செலுத்தி வந்தது.

6. காளப்ப கவுடர் எப்பொழுது இறந்தார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. 1ம் பிரதிவாதி கந்தசாமிக்கு சர்மிளா என்ற மகளும் சந்திரசேகரன் என்ற மகனும் உள்ளார்கள் என்றால் சரிதான். 9.3.2007 ல் 1ம் பிரதிவாதியும் சர்மிளாவும் சேர்ந்து சந்திரசேகரன் பெயருக்கு 1 ஏக்கர் 19 செண்ட் நிலத்தை பொறுத்து ஒரு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு தெரியாமல் செய்து விட்டார்கள். மற்றொரு 1 ஏக்கர் 19 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதியும் சர்மிளாவும் சேர்ந்து சந்திரசேகருக்கும் அவரது நண்பர்களுக்கும் சொத்தை விற்றுள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த நான்கு பேரும் சேர்ந்து சதீஸ்குமாருக்கு ஒரு பொது அதிகார பத்திரத்தை கொடுத்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது.

7. இந்த வழக்கில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியாது. காளப்ப கவுடர் காலத்திலிருந்து 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை பொறுத்து என்னென்ன பரிவர்த்தனைகள் செய்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியாது. எந்த சமயத்திலும் வழக்குச் சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லாத காரணத்தால்தான் வழக்குச் சொத்தில் என்ன பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாமல் உள்ளதென்றால் சரியல்ல. அது முறையாக தெரிந்திருந்தால் தேவையான தரப்பினரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றும் அவ்வாறு தேவையான தரப்பினரை சேர்க்காத காரணத்தால் இவ்வழக்கு நிலைக்கத் தக்கதல்லவென்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.